தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**9 வயதுப்பிரிவு**
**(01.01.2017 – 31.12.2017 வரையில் பிறந்தோர்)**

## கேணல் சங்கர்

தமிழீழ விடுதலைப் போராட்டம் தந்த மிகப்பெரும் ஆளுமைகளுள் ஒருவரே கேணல் சங்கர். இவர் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர்.

தமிழர் வரலாற்றின் மிகப்பெரும் படைத்துறை சாதனைகளுள் ஒன்றான தமிழீழ வான்படையைக் கட்டியெழுப்பி வழிநடத்திய ஆணிவேர். தமிழீழக் கடற்படையின் தேவை உணர்ந்து ‘கடற்புறா’ என்ற கடல் அணி உருவாக்கத்திலும் பங்களித்தவர்.

தமிழ்நாட்டிலே விண்ணுந்து அறிவியலைக் கற்றவர். கனடாவிலே பொறியியலாளராகப் பணியாற்றிப் பட்டறிவு பெற்றவர். போர்க்கருவிகளை உருவாக்குதல், காடுகளில் வழி அறிதல், தொழில்நுட்பம் எனப் பல்வேறு பணிகளுக்குப் பொறுப்பாக இருந்து, போராளிகள் பலரை வளர்த்தவர்.

இவர் மட்டுமன்றி இவரது குடும்பமே தமிழீழ விடுதலைக்காக அரும்பணி ஆற்றியவர்கள். இவரது இரண்டு சகோதரர்கள் மாவீரராகி தமிழீழ விடுதலைக்கு வலுச்சேர்த்தவர்கள்.

சிறிலங்கா படையின் ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதலில் 2001 செப்ரெம்பர் இருபத்தாறாம் நாள் கேணல் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்தார். இவர் எம்மைவிட்டுப் பிரிந்து இருபத்தைந்து ஆண்டுகள். கேணல் சங்கர் பெயர்சொல்லி, நாம் காற்றிலேறி விண்ணையும் சாடுவோம்.

“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”